FIRST INFORMATION REPORT

Under Section 173 BNSS முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069060

1. District : The Nilgiris PS: V & AC Year 2026 FIR No.: 6 Date: 10.10.2026.
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC (Amendment) Sections பிரிவுகள்: 7(b)
(ii) Act சட்டம்: Act. 2018. Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 5.10.2026 13.00 hrs.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time : 12.10.2026 10.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Ithalar Panchayat Office 15 km's West.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A. Saravanan (b) Father's/ Husband's Name : K. Andi.
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Contractor (g) Address : D. No. 9/421, Periyar Nagar. Emerald. The Nilgiris District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
A. Karthick Panchayat Secretary. Ithalar Panchayat Udhagamandalam Panchayat Union, The Nilgiris.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- Does Not Arise -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுப்போன / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவுப்போன / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Given in separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ....., Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறைப்பிடம் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறைப்பிட்டாருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A.Saravanan

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறைப்பிட்டார் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

12-10-2026

15. Date & Time of despatch to the court: 12.10.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13.45 hrs.

RECEIVED
A.Saravanan

Name: Thiru G.SHANMUGARADJA.
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police
VEAC, The Nilgiris.

..... Continuation of Column No.12 of FIR in Cr.No.6/2026/AC/Nl, dt:12.10.2026

Honoured Sir,

On 12.10.2026 at about 10.00hrs one Tr.A.Saravanan, S/o Andy, Door No.9/421, Periyar Nagar, Emerald, the Nilgiris District appeared before me and gave a written complaint, which runs as follows:

அனுப்புநர்

ஆ.சரவணன்,
த/பெ. K.ஆண்டி (லேட்),
கதவு எண். 9/421,
பெரியார் நகர்,
எமரால்டு,
நீலகிரி மாவட்டம்.

பெறுநர்

காவல் ஆய்வாளர் அவர்கள்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நீலகிரி.

ஐயா,

எனது சொந்த ஊர் பாலக்காடு, கேரளா மாநிலம் ஆகும். ஆனால் நான் படித்ததெல்லாம் தமிழ்நாடு, நீலகிரி மாவட்டம், எமரால்டு கிராமத்தில் ஆகும். நான் நீலகிரி மாவட்டம், எமரால்டு பெரியார் நகர் பகுதியில் குடியிருந்து வருகிறேன்.

நான் உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 2004-ம் ஆண்டு முதல் அரசு பதிவு பெற்ற ஒப்பந்ததாரராக இருந்து வருகிறேன். தற்போது அரசு ஆணை எண்.109 ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை SGS-21, நாள்:27.06.2024-ன்படி, நான் 17.04.2025-ம் தேதி நான்காம் நிலை பதிவு ஒப்பந்ததாரராக எனது பதிவை M/s Saravana Traders, Contractor Emerald Post என புதுப்பித்தேன். எனது பதிவு எண்.5/25-26 Ch No.53 ஆகும். நான் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அரசு சம்மந்தபட்ட பணிகளை ஒப்பந்தபுள்ளி மூலம் எடுத்து செய்து வருகிறேன்.

உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியம், இத்தலார் ஊராட்சி 6-வது நிதிக்குழு மானியம் 2023-24 மலைப்பகுதிகளில் உள்ள ஊராட்சிகளை மேம்படுத்துதல் திட்டத்தில் ஒசட்டியில் 30,000 லிட்டர் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி பணிக்கான மின்னணு ஒப்பந்தபுள்ளி நாள்:31.10.2025-ன்படி கோரப்பட்டது. நான் ஒப்பந்தபுள்ளியில் குறைந்த விளை ஒப்பந்தபுள்ளி மதிப்பீடு விலைக்கு குறைவாக குறிப்பிட்டிருந்ததால், ஒசட்டி தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி பணிக்கான வேலை உத்தரவு தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் செயல்முறைகள் 05/2025, நாள்: .10.2025-ன்படி எனக்கு வழங்கப்பட்டது. பணியின் மதிப்பானது ரூ.7,50,000/- ஆகும்.

ரூ.7,50,000/-க்கான 1% வைப்புத்தொகை ரூ.7,500/- மற்றும் திட்டத்தொகை ரூ.1,841/- ஆக மொத்தம் ரூ.9,341/-ஐ 31.10.2025-ம் தேதி உதகமண்டலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் செலுத்தினேன். அதற்காக ரசீது எண்.2025-2026/12/1/13/7/11-ஐ பெற்றுக்கொண்டேன்.

ஒசட்டி தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி பணியை 04.06.2026-ம் தேதி ஆரம்பித்து 12.08.2026-ம் தேதி முடித்தேன்.

நான் செய்த பணியை உதகமண்டலம் ஊராட்சி ஒன்றிய உதவி பொறியாளர் அளவீடு செய்து மேற்படி பணிக்காக ரூ.7,49,913/- என்று அளவீட்டு புத்தகத்தில் பதிவு செய்தார். அதன் பிறகு நான் செய்த பணியை உதவி செயற்பொறியாளர் ஆய்வு செய்து அதில் கையொப்பம் செய்து அலுவலக நடவடிக்கை முடித்து உதவி வட்டார வளர்ச்சி அலுவலரின் ஒப்புதல் கொடுத்ததன் பேரில், இத்தலார் ஊராட்சி அலுவலகத்திற்கு எனக்கு பிடித்தம் செய்தது போக மீதித்தொகை ரூ.6,90,955/- வழங்க பரிந்துரை செய்யப்பட்டு இத்தலார் ஊராட்சி செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதன்பின்னர் நான் 24.09.2026-ம் தேதி இத்தலார் பஞ்சாயத்திற்கு சென்று அங்கு பஞ்சாயத்து கிளார்க் இருக்கையில் அமர்ந்திருந்த திரு.A.கார்த்திக் என்பவரை சந்தித்து, ஒசட்டி தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி பணிக்கான பில் தொகை செக்கை வழங்குமாறு கேட்டேன்.

அதற்கு அவர் செக் கொடுக்க வேண்டுமானால், தனக்கு டென்டருக்கு 3% மற்றும் பில்லுக்கு 2% என 5% கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் எவ்வளவு தொகை என்று கேட்டேன். அவர் மொத்த அமௌண்ட் ரூ.7,50,000/-ல் 5% 35,000/- தனக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்று கூறினார். நான் பதில் எதுவும் சொல்லாமல் அங்கிருந்து வந்துவிட்டேன்.

அதன்பின்னர் 30.09.2026-ம் தேதி இத்தலார் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று பஞ்சாயத்து கிளார்க் திரு.கார்த்திக்கை சந்தித்து செக் கொடுக்குமாறு கேட்டேன். அவர் செக் 24.09.2026-ம் தேதியே ரெடியாகிவிட்டது ஆனால் தான் கேட்ட ரூ.35,000/- கொடுத்தால்தான் செக் கொடுக்க முடியும் என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் தற்போது அவ்வளவு பணம் இல்லை. செக் கிளியர் ஆனால் தான் பணம் கொடுக்க முடியும் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் பணம் கொடுக்கவில்லையென்றால், EMD பணம் இங்கதான் இருக்கு அத வாங்க முடியாது என்று சொன்னார். அதற்கு நான் செக் கிளியர் ஆனதும் கொண்டுவந்து தருகின்றேன் என்று சொன்னேன். அப்போது அவர் 24.09.2026-ம் தேதியிட்ட இத்தலார் கனரா வங்கி காசோலை எண்.540346-ஐ கொடுத்து, செக் கிளியர் ஆனதும் பணத்தை கொடுக்குமாறு சொன்னார். நானும் செக்கை வாங்கிக்கொண்டு அங்கிருந்து வந்துவிட்டேன்.

பின்னர் செக்கை 01.10.2026-ம் தேதி என்னுடைய சேமிப்பு வங்கி கணக்கு எண்.316615886 உள்ள உதகமண்டலம் சென்ட்ரல் பேங் ஆப் இந்தியா வங்கியில் செக்கை கலெக்ஷனுக்கு போட்டேன். செக்கை கலெக்ஷனுக்கு போடுவதற்கு முன்பு நகல் எடுத்துக்கொண்டேன். அன்றைய தினமே செக் அமௌண்ட் என்னுடைய அக்கௌண்டில் கிரிடிட் ஆனது.

பின்னர் மூன்று நாட்கள் விடுமுறை என்பதால், நான் 05.10.2026-ம் தேதி மதியம் சுமார் 1.00 மணிக்கு இத்தலார் பஞ்சாயத்து அலுவலகம் சென்று பஞ்சாயத்து கிளார்க் திரு.கார்த்திக் அவர்களை பார்த்து, செக்கில் டேட் உள்ள இடத்தில் 24.09.2026 என்றும், கையெழுத்தில் 24.8.2026 என்றும் இருந்ததை சொன்னேன். அதற்கு அவர் எதாவது வங்கியில் பிரச்சனையா என்று கேட்டார். எதுவும் இல்லை என்று சொன்னேன்.

அப்போது திரு.கார்த்திக் என்னிடம் பணம் ரெடியாகிவிட்டதா என்று கேட்டார். ரூ.35,000/- என்பது அதிகமாக உள்ளது. கொஞ்சம் குறைத்து கொள்ளுமாறு கேட்டேன். அதற்கு அவர் இப்பவே 8% என்பதை 5% ஆக குறைத்து தான் சொல்லியுள்ளேன். சரி ரூ.20,000/- கொடுக்குமாறு சொன்னார். நான் நாளை புதன்கிழமை கொண்டுவந்து கொடுக்கிறேன் என்று சொன்னதற்கு, அவர் தான் மேட்டுப்பாளையம் சென்றுவிட்டு, வியாழக்கிழமை மாலை தான் வருவேன் என்று சொன்னார். நானும் எனக்கு சென்னை செல்ல வேண்டிய வேலை இருப்பதால், வரும் திங்கள் அல்லது செவ்வாய்கிழமை வருவதாக தெரிவித்தேன். அப்போது அவர் ரூ.20,000/- தனக்கு கொடுக்கவில்லையென்றால், இத்தலார் பஞ்சாயத்தில் இருந்து எனக்கு வரவேண்டிய EMD தொகைகள் எதுவும் வாங்க முடியாதபடி செய்துவிடுவேன் என்று கண்டிப்புடன் கூறினார். நான் எதுவும் சொல்லாமல் அங்கிருந்து வந்துவிட்டேன்.

இத்தலார் பஞ்சாயத்து கிளார்க் திரு.A.கார்த்திக் என்பவர் லஞ்சமாக கேட்ட ரூ.20,000/-ஐ கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாததால், இத்தலார் பஞ்சாயத்து அலுவலகத்தில் கிளார்க்காக பணிபுரியும் திரு.A.கார்த்திக் என்பவர் கேட்ட பணம் ரூ.20,000/-த்துடன் தட்டச்சு செய்த புகார் மனு மற்றும் ஊராட்சி அலுவலகத்தில் கொடுத்த ஆவணங்களின் நகல்களையும் தங்களிடம் கொடுக்கிறேன். இத்தலார் பஞ்சாயத்து கிளார்க் திரு.A.கார்த்திக் என்பவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். Honoured Sir, Received the above complaint on

12.10.2026 at 10.00hrs, A discreet enquiry was caused against Tr.A.Karthick, Panchayat Secretary, Ithalar Panchayat, Udhagamandalam Panchayat Union, the Nilgiris District and confirmed about the corrupt activities and also verified the bonafide of the complainant. After getting orders from Superior Officer, registered a case in Cr.No.6/2026/AC/NI U/s 7(b) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 dated:12.10.2026 at 11.45hrs and took up the investigation. The original FIR along with the complaint given by the complainant are submitted to the concerned Hon'ble Court.

12-10-2026

(G.SHANMUGAVADIVU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
the Nilgiris.